**செய்தி வெளியீடு எண்: 219** **நாள்: 21.03.2020**

## செய்தி வெளியீடு

நாடு முழுவதும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மத்திய, மாநில அரசுகளின் முன்னெச்சரிக்கை அறிவிப்பினையடுத்து, பொதுமக்களின் பாதுகாப்பிற்காக பொது ஊரடங்கு ஞாயிற்றுக்கிழமை **22.03.2020** அன்று கடைபிடிப்பதையொட்டி, அன்றைய தினம் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி ஆவின் பால் கிடைத்திட ஏதுவாக பால் விநியோக பணிகளை முடுக்கிவிட ஆவின் நிர்வாகம் விரிவான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மேலும் அனைத்து ஆவின் நேரடி விற்பனை நிலையங்களிலும், பொதுமக்களுக்கு தேவையான பால் மற்றும் பால் பொருட்கள் கிடைத்திடும் வண்ணம் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பொது மக்களின் கூடுதல் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, கூடுதல் பால் வழங்க ஆவின் நிர்வாகம் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

பொது மக்களின் சேவையில் ஆவின் நிறுவனம் என்றும் அதிக அக்கறையுடன் செயல்படும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்கிறோம்.

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்,

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**